**கவனிக்க**.- 2018.09.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2089 - 2018 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා - 2018.09.14**

*2089 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## *பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1241 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1149 |


**கவனிக்க**.- இரசாயன ஆயுதங்கள் சமவாயம் (திருத்தம்) சட்ட மூலம் 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1241 - B81450 - 5,403(2018/9)

# பதவிகள் – வெற்றிடம்

திருத்தம்

**அக்மீமன பிரதேச சபை**

*2018.07.20 ஆந் திகதிய 2081 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவித்தல் இல. 07- 497 இல்*

***04. பதவியில் அமர்த்துவதற்கான நிபந்தனை :***

*4.1. இந்த பதவி நிரந்தரமானது; ஒய்வூதியமுடையது. ஆட்சேர்க்கப்படும் சேவையாளர்கள் விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய நிதியத்திற்கு உதவித்தொகை ஒதுக்குதல் வேண்டும் என பிரசுரிக்கப்பட்டுள்ளது ;*

*அது,*

*4. 1. இந்த பதவி நிரந்தரமானது. சேவையாளர்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு சந்தாப்பணம் கட்ட வேண்டும்." என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.*

*பீ. ஜீ. பந்துல,*
*செயலாளர்,*
*அக்மீமன பிரதேச சபை.*

*அக்மீமன பிரதேச சபை அலுவலகம்,*
*2018, ஓகத்து 17.*

*9-227*

---

**ஹக்மன பிரதேச சபை**

திருத்தம்

**பதவி வெற்றிடம் தொடர்பாக நாட்கள் நீடித்தல்**

*ஹக்மன பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள தகண அறை உதவியாளர் பதவி தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தலில் 2018.07.20 ஆந் திகதிய இலக்கம் 2081 இன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தின் (ஆ) உள்ளூராட்சி நிருவன பகுதியின் வீதி அமைப்பு திட்டத்தின் மூலம் அறிவித்தலில் குறித்துள்ளவாரான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2018.09.21 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன். இது தொடர்பாக ஏனைய அனைத்து நிபந்தனைகளும் மேற்குறித்த வர்த்தமானப் பத்திரத்தின் படியாகும் என அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*வீ. பீ. கே. அநுராத பேமரத்ன,*
*தலைவர்,*
*ஹக்மன பிரதேச சபை.*

*9 - 330*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**எம்பிலிபிட்டிய நகர சபை**

துணைச்சட்டம்

*255 ஆவது அத்தியாயத்தின் கீழ்க் காணப்படும் நகரசபை உரிமை கட்டளை 153, 154 ஆவது பிரிவுகளில் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப சப்பிரகமுவ மாகாணசபை நிருவாகத்திற்கு உட்பட்ட எம்பிலிபிட்டிய நகரசபையால் ஒப்புதல்செய்து*

கொள்ளப்பட்ட கீழுள்ள துணைச்சட்டம், நகரசபை உரிமைக் கட்டளை 154 ஆவது பிரிவில் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப சப்பிரகமுவ மாகாணசபை ஆளுநரான என்னால் அனுமதிக்கப்படுகிறது என்பதை இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

நிலூகா ஏக்கநாயக்க,
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை,
2018, ஓகத்து 16.

**எம்பிலிபிட்டிய நகரசபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் வீதிகளில் பல்லேகம பஸ்தரிப்பிட நிலையத்தில் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் வாகனங்களைக் கையாளல் பற்றிய துணை விதிகள்**

1. இப்பகுதியின் துணை விதிகள் எம்பிலிபிட்டிய நகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் வாகனங்கள் நிறுத்தி வைத்தல் மற்றும் வாகனங்களைக் கையாளலை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் வீதிகளில், பஸ் தரிப்பிட நிலைய பூமியில் வாகனங்களை நிறுத்துதல், வாகனங்களைக் கையாளல் ஒழுங்காகவும் முறையாகவும் பராமரித்து பேணல், பிரயாணிகளை பாதுகாத்தல், வாகன விபத்துக்களை தடுத்தல் என்பவற்றுக்காக இத்துணைவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

3. இங்கு இனிவரும் தலைவராகக் கருதப்படும் நகர சபைத் தலைவரினால் அதிகாரப் பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்துதல் அல்லது வாகனங்கைள நிறுத்துவதை தடைசெய்தல் அல்லது வரையறை செய்யாது கட்டுப்படுத்தும் ஒரு வீதியில், வீதியின் பகுதியில் அல்லது வழியில் யாதுமொரு பகுதியில் ஒதுக்கப்பட்ட வாகனங்களை நிறுத்துமிடத்தை குறிப்பிடுகின்ற அறிவித்தல் அவ்வீதியில் அல்லது வீதியின் பகுதியில் அல்லது வழியில் யாதுமொரு இடத்தில் இருந்து தெளிவாக தெரியும் வகையில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

4. (அ) எம்பிலிபிட்டி நகர சபை பிரதேசத்தில் ஏதெனுமொரு வீதியில் அல்லது வழியில் எந்தவொரு பாகத்திலும்,
   (i) வாகனங்களை நிறுத்தி வைத்தலைத் தடை செய்தல் ;
   (ii) மட்டுப்படுத்தல் ;
   (iii) ஒரு பக்கத்தில் மாத்திரம் வாகனங்கைள நிறுத்தி வைக்க இடமளித்தல் ;
   (iv) பொருட்களை ஏற்றுதல் அல்லது இறக்குதலைத் தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல் ;
   (v) பிரயாணிகளை ஏற்றுதல் அல்லது இறக்குதலை தடை செய்தல் ;
   (vi) பஸ் நிறுத்துமிடமாக பெயரிடல் ;
   (vii) ஒரு திசையில் மாத்திரம் வாகனம் ஓட்டப்படுகின்ற பாதைகள் அல்லது வீதிகளைப் பெயர் குறித்து பயணம் செய்யக்கூடிய திசையைத் தீர்மானித்தல்;

   ஆகியவற்றுக்கு எம்பிலிபிட்டிய நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

   (ஆ) எம்பிலிபிட்டிய நகர சபையினால் (அ) பிரிவின் கீழான ஏதேனும் மட்டுப்படுத்தல்களை மேற்கொண்ட பின்னர் அத்தகைய மட்டுப்படுத்தல் பற்றிய வீதிச் சமிக்ஞைகளை ஏற்புடைய இடத்தில் பொருத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் தலைவர் பணியாதல் வேண்டும். அத்தகைய மட்டுப்படுத்தல்கள் பற்றிய வீதிச் சமிக்ஞைகள், மோட்டர் வாகனங்கள் சட்டத்தின் 164 ஆம் அத்தியாயத்துடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட 1987, மார்ச் மாதம் 13 ஆந் திகதிய 444/18 ஆம் இக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியின் பகுதி I, தொகுதி : (I) ஆம் பந்தியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் உருவப்பட மாதிரிக்கமைய இருக்க வேண்டுமென்பதோடு, அத்தகைய ஒழுங்குவிதிகளில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

5. எம்பிலிபிட்டிய நகர சபை பிரதேசத்தினுள் அல்லது எம்பிலிபிட்டிய நகர சபை பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் ஏதேனும் வீதியில் அல்லது வழியில் பயணம் செய்யும் எந்தவோர் வாகனத்தின் சாரதியால் 2 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியின் பணிப்புகளின் கீழ் பொருத்தப்பட்டுள்ள வீதி சமிக்ஞையின் அல்லது சமிக்ஞைகளின் மூலமாக்க காட்டப்படுகின்ற பணிப்புகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

6. 5 ஆவது துணைவிதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் 3 ஆவது துணைவிதியின் பணிப்புரைகளின் கீழ் எம்பிலிபிட்டிய நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்ட ஏதேனும் வீதிச் சமிக்ஞையின் மூலம் குறித்துரைக்கப்பட்ட எல்லைகள்,

(அ) அத்தகைய வீதியின் அல்லது வழியின் ஏதேனும் பாகத்தில் அல்லது எம்பிலிபிட்டிய நகர சபைப் பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியின் அல்லது வழியின் அண்மையிலுள்ள ஏதேனும் கட்டிடத்தில் அல்லது அதன் அருகாமையில் ஏற்படும் ஏதேனும் தீ அல்லது வேறு ஏதேனும் அனர்த்தத்தை தடுத்து நிறுத்தும் பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள எம்பிலிபிட்டிய நகர சபையின் தீயணைப்பு வாகனம் அல்லது வேறு ஏதேனுமொரு வாகனத்திற்காக ;

(ஆ) அத்தகைய வீதியின் அல்லது வழியின் ஏதேனும் பாகத்தில் அல்லது எம்பிலிபிட்டிய நகர சபைப் பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியின் அல்லது வழியில் ஏற்படும் வாகன நெரிசலை நீக்குவதற்காக அல்லது எம்பிலிபிட்டிய நகர சபைப் பிரதேசத்தினுள் இடம்பெறும் வேறு ஏதேனும் எதிர்பாராத நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செய்யப்படும் கட்டளைக்கமைய செயற்படுவதற்காக ;

அத்தகைய 5 ஆவது துணைவிதியின் பணிப்புக்களை மீறுவதாகக் கருதுதல் ஆகாது.

7. (அ) எம்பிலிபிட்டிய நகர சபை பிரதேசத்தினுள், இதனகத்துப் பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிடம்" என அறியப்படும் மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் கருமத்திற்காக,

(i) எம்பிலிபிட்டிய நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் காணி ; அல்லது
(ii) வேறு ஏதேனும் அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய அத்தகைய அதிகாரசபைக்குச் சொந்தமான ஏதேனும் இடத்தை ;

ஒதுக்கிக் கொள்வதற்கு எம்பிலிபிட்டிய நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடங்களில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகன வகைகள் மற்றும் ஒரே தடவையில் நிறுத்திவைக்கக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைக் காலத்திற்குக் காலம் எம்பிலிபிட்டிய நகர சபையினால தீர்மானிக்க முடியும்.

8. சகல வாகன நிறுத்துமிடத்தில் குறைந்த பட்சம் வாகனங்கள் உள்ளே செல்வதற்கு ஒரு வாயிலும் அவை வெளியே செல்வதற்கு பிறிதொரு வாயிலுமென இரண்டு வாயில்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள்ளே வாகனங்களைத் திருப்புவதற்கென வேறான பகுதி அமைக்கப்பட்டிருக்குமாயின், அத்துடன் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் இரு திசையிலும் செல்லக்கூடிய இரட்டை ஓட்டப் பாதைகளும் கதவுகளுக்கான இடவசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வாகனங்கள் உட்செல்வதற்கும் அவை வெளியேறுவதற்குமென ஒரு வாயிலை மாத்திரம் வைத்திருக்க முடியும்.

9. சகல வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கும் வருகை தரும் வாகனங்களுக்கு உள்ளே செல்லும் வாயில் மற்றும் வெளியே செல்லும் வாயில் இலகுவில் வாசிக்கக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய இடத்தின் உள்ளே வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு உட்செல்லும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் செல்ல வேண்டிய திசைகளை இலகுவில் அறிந்து கொள்ளும் விதத்தில் 20 சென்றி மீற்றர் அகலம் கொண்ட வெள்ளை நிற கோட்டுடனான அம்புக்குறிகள் இருத்தல் வேண்டும்.

10. சகலவாகனங்கள் நிறுத்துமிடத்தின் தரை தார் அல்லது கொங்கிறீற் போடப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வாகன நிறுத்துமிடத்தை உபயோகிப்போரின் பாவனைக்காக ஆண், பெண் இருபாலாருக்கும் வேறு வேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே இடத்தினுள் சேரும் நீர் இலகுவாக வடிந்தோடுவதற்காகப் போதியளவு வடிகான்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. சகல வாகனங்கள் நிறுத்துமிட வளவினுள் ஒன்று சேரும் குப்பை கூழங்கள் தினந்தோறும் அப்புறப்படுத்துவதற்கும், அத்தகைய இடத்தில் பேணப்படும் மலசலகூடங்கள் தினந்தோறும் கிருமிநாசினிகளை உபயோகித்து சுத்தம் செய்விப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்தல் தலைவர் பணியாதல் வேண்டும்.

12. சகலவாகனங்கள் நிறுத்துமிடத்திலும் வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி செய்கையில் வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே வரும் மற்றும் வெளியேறும் வாகனங்களுக்கு பயணிப்பதற்காக போதியளவு ஓட்டப்பாதைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

13. ஏதேனும் ஒரு வாகனம் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள் செல்லும் பொழுதும் நிறுத்தி வைக்கும் பொழுதும் அதனுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் வாகனத்திற்கு தடை ஏற்படாதவாறு ஒவ்வொரு வாகனமும் நிறுத்தி வைப்பதற்கு வாகனங்கள் நிறுத்துமிடத்தில் போதியளவு இடவசதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒதுக்கப்பட்ட எல்லைகளைக் காட்டும் 10 சென்றி மீற்றர் அகலத்தைக் கொண்ட வெள்ளை நிறக் கோட்டினால் குறியீடு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

14. ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்காக எம்பிலிபிட்டிய நகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறான கட்டணம் அறவிட முடியும். அவ்வாறே ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்துவதன் பொருட்டு அறவிடுவதற்கு எம்பிலிபிடடிய நகர சபை தீர்மானிக்கும் கட்டணத்தை அத்தகைய வாகனங்கள் நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலில் நன்றாகத் தெரியக்கூடியவாறு மூன்று மொழிகளிலும் காட்சிக்கு வைக்கச் செய்வித்தல் தலைவர் பணியாதல் வேண்டும்.

15. (அ) ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் கட்டணத்தை அறவிடுவதற்காக இதற்கு பின்னர் "வாகனங்கள் நிறுத்துமிடப் பொறுப்பாளர்" என அறியப்படுகின்ற,

(i) எம்பிலிபிட்டிய நகர சபையில் பணியாற்றும் எவரேனும் ஊழியர் ; அல்லது

(ii) எம்பிலிபிட்டிய நகர சபையினால் பகிரங்க கேள்விப் பத்திரத்தைக் கோருவதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் வெற்றிகரமான கேள்வி பெறுநர் அல்லது அத்தகைய கேள்வி பெறுநரால் பெயர் குறிக்கப்படுகின்ற அவரது முகவரை ;

ஈடுபடுத்த முடியும்.

(ஆ) எனினும், ஏதேனும், வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக அறவிடப்படும் கட்டணம் 12 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறு எம்பிலிபிட்டிய நகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தின் அளவை விஞ்சாதிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு வாகனமும் நிறுத்துவதன் பொருட்டு அறவிடப்பட்ட கட்டணத்தின் அளவு இப்பிரிவின் முதலாவது அட்டவணைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு வாகனத்தின் சாரதிக்கு விநியோகிக்கப்படுதல் வேண்டும்.

16. வாகன நிறத்துமிட பொறுப்பாளர் ஒவ்வொருவரும் அக்கருமத்தில் ஈடுபட்டுள்ள காலத்தில் எம்பிலிபிட்டிய நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டதும் வாகன நிறுத்துமிட பொறுப்பாளரென இலகுவில் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய வகையில் உடை அணிந்திருக்கச் செய்தல் தலைவர் பணியாதல் வேண்டும்.

17. (அ) 7 வது துணைவிதியின் (ஆ) பந்தியின் கீழ் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் வகையிலான வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கு வாகன நிறுத்தமிடத்திற்கு பிரவேசிக்கையில் அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் உட்செல்லும் வாயிலருகில் அத்தகைய வாகனத்தின் சாரதியிடம் இப்பிரிவின் இரண்டாவது அட்டவணைக்கு அமைவாக தாயாரிக்கப்பட்ட உட்செல்வதற்கான அனுமதியைக் காட்டுகின்ற அனுமதி அட்டை ஒன்றை விநியோகித்தல்.

வாகனங்கள் நிறுத்திமிடத்தின் பொறுப்பாளரின் கருமம் ஆதல் வேண்டும்.

(ஆ) உட்பிரவேசிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட ஒவ்வொரு வாகனமும் வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னர்,

(i) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அட்டையை வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரிடம் மீள ஒப்படைத்தல் ;

(ii) 14 ஆவது துணைவிதியில் குறிப்பிட்டவாறு எம்பிலிபிட்டிய நகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகளோடு ஒத்துவரக்கூடிய வாகனங்கள் நிறுத்தி வைக்கும் கட்டணத்தை வாகன நிறுத்தமிட பொறுப்பாளரிடம் செலுத்துதல்; அத்துடன்

(iii) செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு ஒத்துவரக் கூடிய 15 ஆவது துணைவிதியின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல்;

அத்தகைய வாகனச் சாரதியின் பணியாதல் வேண்டும்.

18. (அ) எவரேனும் ஆளினால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு எம்பிலிபிடிய நகரசபையினால் தீர்மானிக்கப்பட்ட வகையைச் சேர்ந்த வாகனமல்லாத வேறு எந்தவொரு வாகனம் அல்லது மோட்டார் வாகனம் அல்லாத

எந்தவொரு வாகனத்தையும் வாகன நிறுத்துமிடதில் நிறுத்திவைப்பதற்கோ அல்லது வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே செல்வதற்கோ அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளித்தல் ஆகாது.

(அ) வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து வெளியே எடுப்பதற்காக அத்தகைய வாகனம் இயங்கச் செய்விக்க முடியாத சந்தர்ப்பத்தில், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக வாகன நிறுத்துமிடத்தினுள் வரும் ஏதேனும் வேறு வாகனம் அத்தகைய வாகன நிறுத்துமிடத்திற்கு உள்ளே கொண்டுவரல் போதியளவு இடவசதி இருப்பின் அவ்வாறு வரும் வேறு வாகனத்திற்கு (அ) பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது, எனினும், அத்தகைய வாகனத்தை இழுத்துச் செல்கையில் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேறு வாகனங்களுக்கு எந்தவொரு தடை அல்லது சேதம் ஏற்படும் வகையில் இழுத்துச் செல்லல் ஆகாது.

19. எவரேனும் ஆளொருவரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தின் உள்ளே,

(அ) வாகனங்களைக் கழுவுதல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல் ;

(அ) ஏதேனும் வாகனத்தை அப்புறப்படுத்தும் கருமத்திற்காக அத்தகைய வாகனத்தை இயங்கச் செய்வதற்கு அத்தியாவசியமான திருத்த வேலைகளையோ ரயறொன்றை மாற்றும் பணியோ அல்லாத வேறு பழுதுபார்த்தலைச் செய்தல்.

(இ) (அ) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பழுது பார்த்தலின் போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறான விடயம் பற்றிய கருத்திற் கொள்ளல் தவிர தேவையற்ற அல்லது தடையாகவுள்ள ஏதேனும் ஒலி அல்லது ஒலிகளை எழுப்புதல் ;

(ஈ) அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளரின் அனுமதி இன்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட இடத்திலிருந்து அந்த வாகனத்தை வாகன நிறுத்துமிடத்தின் வேறோர் இடத்திற்கு எடுத்துச் சென்று நிறுத்துதல் ;

(உ) அத்தகைய வாகன நிறுத்துமிடத்தின் ஓட்டப்பாதை நிரல்களோ அல்லது உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் வாயில்களைத் தடை செய்யும் வண்ணம் வாகனங்களை நிறுத்தி வைத்தல் ;

(ஊ) விபத்தொன்றைத் தவிர்த்துக்கொள்ளல் அல்லது வாகனத்தில் அல்லது அதில் தங்கியிருப்போரின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளல் பணியைத் தவிர வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அபாய அறிவிப்பு தெரிவிக்கும் உபகரணத்தை ஒலிக்கச் செய்தல் ;

(எ) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய வாகன நிறுத்துமிடத்திற்கு உட்பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் ஏதேனும் வாகனத்தின் ஹோர்ன் ஒலி எழுப்புதல் ;

(ஏ) மதுபானம் அருந்துதல் அல்லது வெற்றிலை எச்சில் துப்புதல் அல்லது கெட்ட வார்த்தைகளை பாவித்தல் அல்லது குழப்ப நிலையை ஏற்படுத்தல் அல்லது ஒழுக்கக் கோடான செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றை புரிதல் ஆகாது ;

20. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தினதும் பாதுகாப்பு பற்றிய பொறுப்பு அத்தகைய வாகன நிறுத்துமிடத்தினுள் வாகனத்தை நிறுத்தும் ஆளைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதோடு, ஏதேனும் வாகனத்திற்கு வாகன நிறுத்துமிடத்தினுள் நிகழும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக எம்பிலிபிட்டிய நகரசபை, தலைவர் அல்லது வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் பொறுப்புக் கூறுதலுக்கு உள்ளாகல் ஆகாது.

21. தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியிடமிருந்து வாகனத்திற்காக விநியோகிக்கப்பட்ட உட்பிரவேச அனுமதி அட்டையை பரிசோதிப்பதற்காகக் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அதைப் பரிசோதிப்பதற்காக வழங்குதல் வாகனத்தின் உரிமையாளர் அல்லது சாரதியின் பணியாதல் வேண்டும்.

22. 9 வது துணைவிதியில் குறிப்பிட்டவாறு ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தினுள் அமைந்துள்ள ஓட்டப்பாதைகளில் வாகனங்கள் செலுத்தப்பட வேண்டிய திசையைக் காட்டுவதற்காக குறியீடு செய்யப்பட்ட திசைக்கு முரணான திசையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனும் வாகனம் செலுத்தப்படல் ஆகாது.

23. ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தல் செய்யப்பட்டுள்ள நிர்மாணத்திற்கு அல்லது அங்கு காணப்படுகின்ற ஏதேனும் உபகரணத்திற்கு சேதம் விளைவித்தல் அல்லது உருக்குலைத்தல் எவரேனும் ஆளினால் செய்யாதிருத்தல் வேண்டும்.

24. எம்பிலிபிட்டிய நகரசபை பிரதேசத்தினுள் நிறுவப்பட்டுள்ள ஏதேனும் வாகனங்கள் நிறுத்துமிடத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள,

(அ) அரச வாகனங்களுக்கு ;
(ஆ) மாகாணசபை வாகனங்களுக்கு ;
(இ) மாகாணத்தினுள் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்களுக்கு ;

இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் ஆகாது. எனினும் ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் ஏதேனும் வாகனத்திற்கு அத்தகைய பணிப்புரைகள் இப்பிரிவின் துணைவிதிகளின் குறிப்பிட்டவாறே ஏற்புடையதாதல் வேண்டும்.

25. ஏதேனும் வாகன நிறுத்துமிடத்தில் உட்பிரவேசிப்பதற்கான அனுமதி அட்டை நிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தை அத்தகைய வாகன நிறுத்துமிடத்திலிருந்து அகற்றுவதற்கு தலைவர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது வாகன நிறுத்துமிடத்தின் பொறுப்பாளர் நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாக வேண்டும்.

26. இத்துணை விதியிலுள்ள யாதுமொரு விதியை மீறல் குற்றமாவதோடு அவ்வாறு மீறும் ஒரு நபர் உரிய அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்காக குற்றவாளியாக்கப்பட்டால் 255 ம் அதிகாரமான நகரசபை உரிமைக்கட்டளை 153 (2) பிரிவில் உள்ளபடி தண்டப்பணமும், குற்றவாளியாக்கப்பட்ட பின் இவ் அத்துமீறஸ் தொடர்ச்சியாக நடைபெறும் பட்சத்தில் அம்மீறுதலைக் கவனத்திற் கொண்டு தலைவர் அல்லது செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் எழுத்துமூலமான அறிவித்தல் வழங்குவதின் பின் குற்றமிளைக்கப்படுகின்ற ஒவ்வொரு தினத்திற்கும் நகர சபையின் உரிமைக்கட்டளை 153(2) பிரிவில் உள்ளபடி மேலதிகத் தண்டப்பணத்துடன் தண்டனையும் உரிமைப் பத்திரத்தை ரத்து செய்வதற்கும் ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

27. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,

"பஸ்தரிப்பிடம்" என்பது எம்பிலிபிட்டிய பல்லேகமயில் அமைந்துள்ள எம்பிலிபிட்டிய நகரசபைக்கு உரிய மத்திய பஸ்தரிப்பிடம் என பொருள்படும்.

''வழி'' என்பது எம்பிலிபிட்டிய நகரசபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு எம்பிலிபிட்டிய நகரசபைக்குச் சொந்தான ஏதேனும், வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தைக் காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம் ஏதேனும் வகையிலான மதகு, நீக்கடவை, மதில், வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளூசு, துணைமதில், கைப்பிடி சங்கிலி, வேலி, சமிக்ஞைப்பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

"வாகனம்" என்பது, மோட்டர் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடலுக்கு பொருத்தமான வாகனம் எனக் கருதப்படல் வேண்டும்.

"சபை" என்பது எம்பிலிபிட்டிய நகரசபை என்பதாகும்.

"தலைவர்" என்பது எம்பிலிபிட்டிய நகரசபை தலைவர் என்பதாகும்.

"அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி" என்பது எம்பிலிபிட்டிய நகரசபை தலைவரினால் எழுத்து மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தயோகஸ்தர் என்பதாகும்.

28. இத்துணை விதியில் ஏதேனும் ஒரு மொழியில் சம்பந்தமாக ஒவ்வாமை ஏற்படுமிடத்து இதன் சிங்களப் பிரதி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வலுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

**முதலாவது அட்டவணை**

*15 வது துணைவிதியின் (அ) பந்தி /*

**எம்பிலிபிட்டிய நகரசபை**

*.......................................................... வாகனங்கள் நிறுத்துமிடம்*

**வாகனங்களை நிறுத்தி வைத்தல் கட்டணம்**

*பற்றுச்சீட்டு இலக்கம் : ....................................................*

| | | |
|---|---|---|
| வாகனத்தின் இலக்கம் | : | .................................................. |
| திகதி | : | 20 ...................................................... |
| வருகைதந்த நேரம் | : | மு. ப. /பி. ப. : ......................................... |
| வெளியேறிய நேரம் | : | மு. ப. /பி. ப. : ......................................... |
| அறவிடப்பட்ட கட்டணம் | : | ரூபா : ........................................................ |

**இரண்டாவது அட்டவணை**

*17 வது துணைவிதியின் (அ) பந்தி*

**அட்டையின் முன்புறம்**

**எம்பிலிபிட்டிய நகரசபை**

*.......................................................... வாகன நிறுத்துமிடம்*

**உட்பிரவேச அனுமதி அட்டை**

**அட்டையின் பின்புறம்**

**இந்த அட்டையைக் கைமாற்றுதலாகாது**

**வாகன நிறுத்துமிடத்திலிருந்து**

**வெளியேறும் போது மீள ஒப்படைத்தல்**

**வேண்டும்.**

*9 - 342*

---

**சப்பிரகமுவ மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக) சட்டவிதிமுறையின் 2 ஆவது பிரிவினோடு மொழியப்படுகின்ற மயானபூமி மற்றும் சேமக்காளைக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் தெரிவிக்கப்படுகின்ற அறிவித்தல்*

*எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குரியதான மயானபூமி மற்றும் சேமக்காளைக் கட்டளைச்சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் அதிகாரம்பெற்ற அதிகாரியான எம்பிலிபிட்டிய பிரதேசசபை பரிந்துரைத்தலின்படி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாணசபை (வகிபாக) சட்டவிதிமுறையின் 2 ஆவது பிரிவினோடு மொழியப்படுகின்ற மேற்படி கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவினால் கௌரவ பிரதான அமைச்சருக்குரிய அதிகாரங்கள் சப்பிரகமுவ மாகாணசபை கலைக்கப்பட்டதினால் கௌரவ ஆளுநர்*

என்ற வகையில் என்மீது சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக இங்கு பின்வரும் இலக்கம் 01 முதல் 10 வரையிலான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகள் மரணித்தவர்களை புதைத்திட அல்லது தகனம் செய்திட ஒதுக்கப்பட்ட பொது மயான பூமியாக பாவனை செய்திட உத்தரவிடுகின்றேன்.

நிலூகா ஏக்கநாயக்க,
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ பிரதேச சபை அலுவலகம்,
2018, ஓகத்து 16.

### அட்டவணை 01

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | உடவலவ தெற்கு கால்வாய் மயானபூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.640 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ர/வி/வலவ/89/47P இல் காட்டப்பட்டுள்ள 179 இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 177 ஆம் இலக்கக் காணித்துண்டு<br>தெற்கே - 181 ஆம் இலக்கக் காணித்துண்டு<br>கிழக்கே - 178 2/6, 178 3/6, 178 4/6 ஆம் இலக்கக் காணித்துண்டு<br>மேற்கே - 180 ஆம் இலக்கக் காணித்துண்டு |

### அட்டவணை 02

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | மடுவன்வெல மயான பூமி 02 ஆம் வெளி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.192 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ர/வி/வலவ/89/24P இல் காட்டப்பட்டுள்ள 02 ஆம் இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - கம்மான பாதை<br>தெற்கே - 16 ஆம் இலக்கக் காணித்துண்டு<br>கிழக்கே - 03 ஆம் இலக்கக் காணித்துண்டு<br>மேற்கே - கம்மான பாதையும் 18 இலக்கக் காணித்துண்டும் |

### அட்டவணை 03

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | தூங்கம மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.100 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ISPP2 இல் காட்டப்பட்டுள்ள 734 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 722 ஆம் இலக்கக் காணித்துண்டின் நுளை பாதை<br>தெற்கே - 734 ஆம் இலக்கக் காணித்துண்டின் மீதிப்பகுதி<br>கிழக்கே - 734 ஆம் இலக்கக் காணித்துண்டின் மீதிப்பகுதி<br>மேற்கே - 734 ஆம் இலக்கக் காணித்துண்டின் மீதிப்பகுதி |

### அட்டவணை 04

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | மலபொட்டுஆர மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.815 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ர/வி/வலவ/89/67P இல் காட்டப்பட்டுள்ள 78 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - மலபொட்டுஆர பாதுகாப்பு வனம்<br>தெற்கே - 74, 76, 77 ஆம் இலக்கக் காணித்துண்டுகள்<br>கிழக்கே - கம்மான பாதை<br>மேற்கே - 7 ஆம் இலக்கக் காணித்துண்டு |

**அட்டவணை 05**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | முதுன்மன்கட மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.920 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் 89 - 40$^{P}$ இல் காட்டப்பட்டுள்ள 288 ஆம் இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 287 1/2, 287 2/2 ஆம் இலக்கக் காணித்துண்டுகள் |
| | | | தெற்கே - கம்மான பாதை |
| | | | கிழக்கே - கம்மான பாதை 287 1/2, 287 2/2 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| | | | மேற்கே - 289, 290, 291 ஆம் இலக்கக் காணித்துண்டுகள் |

**அட்டவணை 06**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | உடவலவ CDE பகுதி மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.696 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ர/வலவ/90/42$^{PC}$ இல் காட்டப்பட்டுள்ள 49 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - ஆற்றுப்படுக்கையும், 48 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| | | | தெற்கே - கம்மான பாதை |
| | | | கிழக்கே - ஆற்றுப்படுக்கை |
| | | | மேற்கே - கம்மான பாதை |

**அட்டவணை 07**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | கங்கேயாய மயானபூமி |
| 02. | காணியின் அளவு | : | ஹெக்டயார் 0.780 |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ர/128 இல் காட்டப்பட்டுள்ள 179 ஆம் இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 163 ஆம் இலக்கக் காணித்துண்டு |
| | | | தெற்கே - கம்மான பாதை |
| | | | கிழக்கே - கம்மான பாதை |
| | | | மேற்கே - 180 ஆம் இலக்கக் காணித்துண்டு |

**அட்டவணை 08**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | குட்டிகல பதலங்கல மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | 01 ஏக்கர் |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவையாளர் வரைபடத்தில் இல. ISPP-1 இல் காட்டப்பட்டுள்ள 1312 ஆம் இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 1312 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி |
| | | | தெற்கே - 1312 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி |
| | | | கிழக்கே - ஊருபெரெத்த பாதை |
| | | | மேற்கே - 1312 ஆம் இலக்கக் காணித்துண்டின் ஒரு பகுதி |

**அட்டவணை 09**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | பொகல் ஆர ஜயதிமாபியபுர மயானபூமி |
| 02. | காணியின் அளவு | : | 01 ஏக்கர் |
| 03. | காணியின் விபரம் | : | நில அளவை வரைபடத்தில் இல. வா.மெமு. பி 1 இல் காட்டப்பட்டுள்ள 3176 ஆம் இலக்கக் காணித்துண்டு |

| | | | |
|---|---|---|---|
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 2718 ஆம் இலக்க காணித்துண்டு குட்டிகல உஸ்வெவ வனபாதுகாப்பு பிரதேசம் |
| | | | தெற்கே - 3179, 3178 ஆம் இலக்க வீட்டு காணித்துண்டுகள் |
| | | | கிழக்கே - 3171 ஆம் இலக்கக் காணித்துண்டு குடியேற்ற பயிர்செய்கை வனப்பிரதேசம் |
| | | | மேற்கே - 3175, 3178 ஆம் இலக்கக் வீட்டு காணித்துண்டுகள் |

**அட்டவணை 10**

| | | | |
|---|---|---|---|
| 01. | காணியின் பெயர் | : | லியனகஸ்தொட்ட மயான பூமி |
| 02. | காணியின் அளவு | : | 01 1/2 ஏக்கர் |
| 03. | காணியின் விபரம் | : | நிலவளவையாளர் வரைபடத்தில் இல. ISPP - 1 இல் காட்டப்பட்டுள்ள 803 ஆம் இலக்க காணித்துண்டு |
| 04. | எல்லைகள் | : | வடக்கே - 806, 807 ஆம் இலக்கக் காணித்துண்டுகள் |
| | | | தெற்கே - 720 D 22 ஆம் இலக்கக் காணித்துண்டும் கால்வாய்ப் படுக்கையும் |
| | | | கிழக்கே - 807 ஆம் இலக்கக் காணித்துண்டும் 622 1/2 ஓடை கால்வாய் |
| | | | மேற்கே - 805 ஆம் இலக்கக் ஓடை கால்வாயும் பயிர்ச்செய்கை ஒதுக்கிடம் |

09 - 343

# நானாவித அறிவித்தல்கள்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

*கீரிமலை சுற்றுலா மையத்தில் உள்ள கேணியில் நீராடுவதற்காக கட்டணம் அறவிடல் -2018*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3ஆம் பிரிவுக்கமைய பிரதேசசபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள சுற்றுலா மையமான கீரிமலைக் கேணியில் நீராடுவதற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு கட்டணம் அறவிடப்படும் எனவும் பாடசாலை மாணவர்கள் பிரதேச சபையில் முன் அனுமதி பெற்றிருப்பின் மற்றும் ஆடி அமவாசை, சிவராத்திரி தினங்களில் இலவசமாக அனுமதிப்பதெனவும் 13/17 05.2018 ஆம் இலக்க சபையின் தீர்மானத்துக்கமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரியோர்களுக்கு - ரூபா 20.00
சிறுவர்களுக்கு - ரூபா 10.00

சோ. சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாகம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் வடக்கு,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

9-229/1

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை

*இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு கட்டணங்களை அறவீடு செய்தல் -2018*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுக்கமைய பிரதேசசபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன்

சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய பிரிவு 126 (vi) (இ) மற்றும் (ix) (ஒ) பிரிவுகளின் கீழ் இடுகாடுகள், சுடுகாடுகள் கட்டளைச் சட்டத்துக்கமைவாக பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டும்- வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 26/11.04 2018 ஆம் இலக்க சபையின் தீர்மானத்துக்கமைவாக வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு, விலங்குகளை புதைப்பதற்கு கட்டணமாக ஒவ்வொரு சடலங்களுக்கும் விலங்குகளுக்கும் ரூபா 1000.00 அறவிடப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சோ. சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் வடக்கு,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

9-229/2

---

**வலிவடக்கு பிரதேச சபை**

பொதுநோக்கு மண்டபம் வாடகைக்கு விடல் - 2018

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3ஆம் பிரிவுக்கமைய பிரதேசசபை அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற பொது மக்களின் சுத்தம் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும் வலி வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் குரும்பசிட்டியில் அமைந்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பொதுநோக்கு மண்டப வாடகைக்கட்டணம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அறவிடப்படும் என 05/11.04.2018 ஆம் இலக்க சபையின் தீர்மானத்துக்கமைவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை நிறுவனங்களுக்கு ஒருநாள் (08 மணித்தியாலம்) பாவனைக்கட்டணம் (மின்சாரக் கட்டணம் ரூபா 400.00 உட்பட) - ரூபா 2400.00

சமூக சேவை நிறுவனங்களுக்கு அரைநாள் (04 மணித்தியாலம்) பாவனைக்கட்டணம் (மின்சாரக் கட்டணம் ரூபா 200.00 உட்பட) - ரூபா 1200.00

பொது மக்கள் மங்கள நிகழ்வுகள் நடாத்துவதற்கு ஒருநாள் (08 மணித்தியாலம்) பாவனைக்கட்டணம் - ரூபா 5000.00

பொது மக்கள் மங்கள நிகழ்வுகள் நடாத்துவதற்கு அரைநாள் (04 மணித்தியாலம்) பாவனைக்கட்டணம் - ரூபா 3000.00

அரச நிறுவனங்கள் பாடசாலைகள் மண்டபத்தினை கட்டணமின்றி பயன்படுத்தலாம். மின்கட்டணம் ஒரு நாள் - ரூபா 400.00
அரை நாள் - 200.00

சோ. சுகிர்தன்,
தவிசாளர்,
வலி வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

பிரதேச சபை அலுவலகம்,
வலி வடக்கு,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).

9-229/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.